# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 16 ஒலி 69 பிரசோற்பத்தி தை 21 ( 04 02 1992 ) செவ்வாய்


## சுதந்திரதின வைபவங்கள்: கொழும்பில் கடும் சோதனை

இன்று கொழும்பு நகரில் நடைபெறும் ஸ்ரீலங்காவின் 44 ஆவது சுதந்திரதினவைபவங்களைமுன்னிட்டு கொழும்பு நகரத்தின் எல்லைப்பகுதியெங்கும் கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது- நகரினுள் நுழையும் ஒவ்வொரு வாகனங்களும் நபர்களும் படையினராலும் பொலிஸாரினாலும் தீவிர பரிசோதனைக்குள்ளாவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

★ உளவுத் தகவல்களைத் திரட்டி

# இந்தியாவுக்கு எதிராக வி.ஓ.ஏ.

# செயற்படாதென உறுதிதரப்பட்டது!

## இந்தியத் தூதுவர் ஜா தகவல்

“சிலாபத்தில் நிறுவப்படும் அமெரிக்க வானொலி நிலையம் (VOA) இந்தியாவுக்கெதிரான உளவுச்செய்திகளைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படமாட்டாது என எமக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது இந்த உறுதி நிலை நாட்டப்படும் என நம்புகிறோம்” இவ்வாறு இந்தியத் தூதுவர் என். என். ஜா ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்-

“அமெரிக்க வானொலி நிலையம் சம்பந்தமாக இந்திய நிலை பாட்டில் எந்த மாற்றமுமில்லை. 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் இவ்விடயம் தொடர்பான கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன” என்றார் தூதுவர் ஜா

இந்த ஒலிபரப்பு நிலையம் எமக்குகவலை அளிக்கவில்லை. உலகம் முழுவதும் எத்தனையோ ஒலிபரப்புகள் இது போன்று உள்ளன என்றும்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## பார்த்தசாரதி 1983 ஆம் ஆண்டில் சமஷ்டித் திட்டத்தையே எடுத்துவந்தார்

“போர் பல துயரங்களை ஏற்படுத்திவிட்டது. சிங்கள மக்களும் யுத்தத்தில் வெறுப்பும் சலிப்பும் கொண்டுள்ளனர்” இவ்வாறு இந்தியத் தூதுவர் ஜா தெரிவித்தார்.

மக்கள் அமைதியாக வாழ சமஷ்டி ஆட்சிமுறை உகந்தது இந்திய அனுபவத்தை வைத்தே இதைச் சொல்கிறேன்.

1983 இல் இத்திட்டத்தையே ஜி பார்த்தசாரதியும் இங்கு எடுத்துவந்தார் எனவும் ஜா அப்போது சுட்டிக்காட்டினார்.

## இந்தியாவின் அணு உலை ஸ்ரீலங்காவில் அமையும்?

பரீட்சார்த்தமாக அணு உலையை ( Nuclear reactor ) இந்தியா ஸ்ரீலங்காவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது குறித்து ஸ்ரீலங்கா அரசின் ஆர்வம் எதுவும் பற்றி தமக்கு தெரியாது என இந்தியத் தூதுவர் ஜா தெரிவித்தார்,

## இராணுவ நடவடிக்கை தாமதமாவதற்கு காரணம்

உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் கூட்டமும், ஸ்ரீலங்கா இராணுவம் புதிதாக வாங்கிய ஆயுதங்கள், வாகனங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படும் கால அவகாசமுமே குடாநாடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ‘செக்’ டாங்கிகளே சிறந்தவையாம்

செக்கோஸ்லவக்கியாவிலிருந்து கொள்வனவு செய்த ரி-55 சிறிய ரக டாங்கிகள் மட்டுமே கோளாறு ஏதுமின்றி இருப்பதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

சக்திவாய்ந்த இந்த டாங்கி பாகிஸ்தான், மத்திய கிழக்கு, சீனா ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## பாஸ்கரலிங்கம் சொல்கிறார்

## வடகிழக்கு சமாதானத்திலேயே பொருளாதார எதிர்காலம் உண்டு

வடக்கு கிழக்கு யுத்தத்தில் ஓர் சமாதான நிலை ஏற்பட்டாலே தேசிய பொருளாதாரத்துக்கு ஒரு நல்லநிலைமை ஏற்படும் என நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் ஏற்படும் சமாதானம் முழு நாட்டுக்குமே நன்மை தரக்கூடியது எனக் குறிப்பிட்ட பாஸ்கரலிங்கம், இராணுவச் செலவு, அகதிபராமரிப்புச் செலவு என்பவற்றினாலேயே பட்ஜட்டில் கூடியளவு துண்டுவிழும் தொகை ஏற்பட்டது என்றார், (10)

## கிளிநொச்சிக்கு ட்ரான்ஸ்போமர் ஒயில்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள ட்ரான்ஸ்போமர்களுக்கு 70 பீப்பா ஒயில் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மீண்டும் ட்ரான்ஸ்போமர் ஒயில்கள் திருட்டு நடைபெறாதிருக்க கண்காணிக்குமாறும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி அரச அதிபர்களுக்கு மின்சார சபை அறிவித்துள்ளது. 6

## இராணுவமுகாமான கல்லூரியை மீண்டும் இயங்கச்செய்ய முயற்சி

இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் திறப்பது பற்றிய உயர் மகாநாடு கொழும்பில் நடைபெற்றது இந்துக் கல்லூரியை இராணுவ அதிகாரிகளும் அமைச்சர் செல்லச்சாமியும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

1983 ஆம் ஆண்டு யூலை இனக்கலவரத்தையடுத்து இந்துக் கல்லூரி மூடப்பட்டு தற்போது இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (06)

## கப்பலில் வந்த தபால்கள் நாளை விநியோகம்

கொழும்பிலிருந்து வில்லிலி கடலில் பருத்தித்துறைக்கு வந்த தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபால் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு நாளை புதன்கிழமை விநியோகிக்கப்படுமென தபாலக உயர்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## நெருக்கடி நிலையில் அமைதி பேண

## ஐ.நா. அமைதிப்படைபிரவேசிக்கும் விதியை அமுல்படுத்த வேண்டும்

நாடுகளுக்கு இடையில் நெருக்கடியான நிலைமை இருக்குமானால் அப்பகுதியில் 48 மணித்தியாலங்களுக்குள் ஐ நா. அமைதிப்படை பிரவேசிக்கலாம் என்ற ஐ நா சபையின் விதியைத் தீவிரமாக அமுல்படுத்த முன்வர வேண்டும் எனப் பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோங் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உச்சி மாநாடு வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் நடந்த வேளையிலேயே பிரான்ஸ் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கரிகாலனை சந்தித்தது

அண்மையில் மட்டக்களப்பு சென்ற கனேடிய குழு ஏறாவூருக்கு அண்மையில் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் தலைவர்களில் ஒருவரான கரிகாலனை சந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊழியர்சங்கப் பேரணி

நாளை நடைபெறவுள்ள வெகுஜனப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் மூகமாக வர்த்தக ஊழியர்கள் பேரணி ஒன்றும் நடைபெறவுள்ளது பேரணி நாளை காலை 8 மணிக்கு வர்த்தக ஊழியர்சங்கத்தலைமை செயலகத்திலிருந்து யாழ் செயலகம் நோக்கிச் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது

## அரசின் பரிசுப் பணத்தை தீபிகா திருப்பிக்கொடுத்தார்!

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சாவ் விளையாட்டுப் போட்டியில் பல தங்கப் பதக்கங்களை பெற்ற தீபிகா சண்முகம் தமக்கு தேசிய விளையாட்டுக் கழகம் வழங்கிய 1,8500ரூபா பரிசுப் பணத்தை திருப்பிக் கழகத்திடம் கொடுத்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸவினால் இத்தொகை தீபிகாவுக்கு நேரில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## உயர் நீதிபதி தலைமையில்

# ஆணைக்குழு வேண்டும் ஆளுநரிடம் தி.மு.க. மனு

1983 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கை, நடைமுறைகள் பற்றி புலன் விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கிடம் தி. மு. க கொடுத்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

மு. கருணாநிதி தலைமையில் தி. மு. க நடத்திய பேரணியின் முடிவில் ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவுத் தடுப்புச் சட்டமான ‘தடா’ சட்டத்தை தமிழகத்தில் பயன் படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும்

அரசியல் எதிரிகளை அட

— பக்கம் பார்

## 'குவா குவா' லீவு இவர்களுக்கும்கிடைக்கும்

இங்கிலாந்தில் மகப்பேறு விடுமுறை தாய்மாருக்கு மட்டுமல்ல தந்தையருக்கும் தற்பொழுது வழங்கப்படுகிறது

ஒரு குழந்தை பிறந்தால் தாய்-தந்தை ஆகிய இருவரும் 12 மாதங்கள் லீவு எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இந்த விடுமுறைச் சலுகையை அங்கு பெண்கள் மட்டுமே அனுபவிக்கிறார்கள். தகப்பன்மார் விரும்புவதில்லை.

பிறந்த குழந்தை பக்கத்தில் இருந்துகொண்டு பராமரிக்கும் வேலை மகாமோசம், போர் அடிக்கும் சமாசாரம் என்று கருதுகிறார்கள். வீட்டு நச்சரிப்பிலிருந்து விடுபட்டு அலுவலகத்தில் இருப்பதே 'பெட்டர்' என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள் அவர்கள்.

ஆனால் தாய்மார்கள் தங்கள் கணவன்மார்களை அவ்வளவு லேசில் விடுவதாக இல்லை-இரண்டு பேரும் தானே பெத்துப்போட்டோம்-எனவே இருவரும் லீவில் இருந்து குழந்தையைக் கவனிக்கவேண்டும் என்று கோரிக்கை எழுப்புகிறார்கள் அவர்கள்.

## தனியார் நிறுவன கட்டிடங்களில் தீவகமாணவர்களுக்கு யாழ்.நகரில் காலைநேரவகுப்புகள்!

வன்செயல் காரணமாக தீவகத்தில் இருந்துஇடம்மாறி மாலைநேரப் பாடசாலைகளாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த பாடசாலைகள் தற்போது காலை நேர வகுப்புக்களை யாழ் நகரில் ஆரம்பித்துள்ளன.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தீவக மாணவர்களுக்கும் குப்பிளான் மாணவர்களுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன

சென்ஜோன்ஸ் அக்கடமியில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன பி. எம். சி. ஒழுங்கையில் உள்ள மாஸ்ரர் தனியார் கல்வி நிறுவனத்தில் அல்லைப்பிட்டி பராசக்தி, அல்லைப்பிட்டி றோ. க. பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் (பிரான்லி வீதி) வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை கிழக்கு மகாவித்தியாலயம், வேலணை ஐயனார் வித்தியாலயம் ஆகியன இயங்குகின்றன. யுனிவேர்சல் தனியார் நிறுவனத்தில் புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் இயங்குகின்றன.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் வேலணை நாகேஸ்வரி வித்தியாலயம், வேலணைமேற்கு நடராசா வித்தியாலயத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் வேலணை சேர் வைத்திலிங்க துரைசாமி மகாவித்தியாலயம் இயங்குகின்றது.

பிரான்லி வீதியில் உள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் மண்டைதீவு மகாவித்தியாலயம், மண்டைதீவு றோ. க. த. க பாடசாலை, மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயம்இயங்குகின்றன (15)

## புதிய அரசியல் அமைப்பு தேவையென்கிறார் ஆரியரத்ன

மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத்தான் அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று சர்வோதயத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

"எமது இலட்சியங்களை அடைவதற்காக மக்களுக்கு நாம் ஒரு புதிய அரசியல் பாதையைக் காட்ட வேண்டும். புதிய ஒரு அரசியற் போக்கைக் காட்ட வேண்டும் இந்த நாட்டில் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். நாம் போதியளவு அதர்மங்களையும், தடைகளையும் சந்தித்துள்ளோம்" என்றும் கூறிய அவர் தம்முடன் இணையுமாறு பிக்குகளுக்கும், பௌத்த தலைவர்களுக்கும், பிற மதத் தலைவர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வடபகுதி அகதிகள் நேற்று வவுனியா திரும்பினர்

தமிழகத்திலிருந்து திருமலைக்குத் திரும்பிய இரண்டாவது தொகுதி அகதிகளுள் வடபகுதியைச் சேர்ந்த 96 பேர் நேற்று வவுனியாவுக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவர்களில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

6 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் முல்லை மாவட்டத்தையும், 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் யாழ் மாவட்டத்தையும், எஞ்சிய ஒருவர் கிளிநொச்சியையும்சேர்ந்தவர்

## மதகுரு இல்லஇரட்டைக்கொலை; பிதா மீதான மரணதண்டனை ஊர்ஜிதம்

இலங்கையில் பெரும் பரபரப்பையேற்படுத்திய மதகுருவின் இல்லத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முதலாவது எதிரியான சங்கைக்குரிய பிதா மத்தியூ பீரிஸ் செய்த மேல் முறையீட்டைக் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்ததுடன் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது

சங்கைக்குரிய மத்தியூ பீரிஸும், திருமதி டெல்ரின் இன்ரமும் சங்கைக்குரிய பீரிசின் மனைவி யூனிஸ்ட் பீரிசையும் டெல்ரினின் கணவன் றொசல் இன்ரமையும் கொலை செய்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1984 பெப்ரவரி 19-ம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் இவர்கள் இருவருக்கும் மரண தண்டனையை விதித்தது. இதன் பின்னர் டெல்ரின் இன்ரம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார், சங்கைக்குரிய பீரிஸின் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது; தற்போதைய தீர்ப்பினால் சங்கைக்குரிய பிதா மத்தியூ பீரிஸ் மரணதண்டனையை எதிர்நோக்குகிறார்.

## சூறையாடல் தீ வைப்புக்கும் படையினரே பொறுப்பு!

கொக்கட்டிச்சோலைச் சம்பவம் குறித்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வெளியிட்ட இடைக்கால அறிக்கையில் அப்பாவிக் குடிமக்களைச் சுட்டுக் கொலை செய்தது மட்டுமின்றி அப்பகுதியில் இரு கிராமங்களில் பல வீடுகளும், கடைகளும் சூறையாடப்பட்டதற்கும் தீவைத்துக் கொளுத்தப்பட்டதற்கும் இராணுவமே பொறுப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கொழும்புப் பத்திரிகையொன்று வெளியிட்டுள்ள செய்தி விமர்சனத்தில் "கொக்கட்டிச்சோலை கொலையில் சம்பந்தப்பட்ட படையினரைக் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாததன் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த சாட்சிகளை ஆணைக்குழு மறைத்து விட்டது பல கேள்விகள் பதிலளிக்கப்படாமலேயே போகின்றன" எனச் சர்வதேச மன்னிப்புச்சபை ஜனவரி 15 இல் அரசுக்கு அனுப்பிய ஆட்சேபனைக் குறிப்புப் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

## சிறுவிளம்பரம்

**ஜோதிட நூல்கள்**

புத்தாண்டுப் பலன்கள், கருணைமழை பொழியும் பாபா, சாயி ஞானரகசியம், முற்பிறவி அற்புதங்கள் சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம் நூல்களாசிரியர் :-PROF. சத்தியதாஸன். (Mech E. Elect. E )சித்தன்கேணிச் சந்தி. 02003

## விரைவில் கொழும்பில் இருதய மாற்று சத்திர சிகிச்சை

இருதயமாற்று சத்திர சிகிச்சை விரைவில் இலங்கையிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள நவலோக ஆஸ்பத்திரியில் இந்த இருதய திருப்பு சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதன் முதலாக உலகில் இருதய மாற்று சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டவரான பேராசிரியர் கிறிஸ்ரின் பெர்னாட் இலங்கையில் இருதயமாற்று சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனையை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் கிறிஸ்ரீன் தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மோட்டார்படகில் குண்டு வெடித்து 14பேர் பலி; 20பேர் படுகாயம்

பங்களாதேஷில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மோட்டார்ப் படகு ஒன்றில் இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர், 20 பேர் படுகாயமுற்றனர்,

பங்களாதேஷின் சட்ட விரோத சாந்தி வாஹினி அமைப்பே இக்குண்டு வெடிப்புக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### அமைச்சர் மறுப்பு

கண்டியில் நடைபெற்ற ஜனாதிபதியின் மூன்றாண்டுப் பூர்த்தி விழாவுக்கு 200 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதென்ற அத்துலத் முதலியின் கூற்றை பொது நிர்வாக அமைச்சு மறுத்துள்ளது.

## ஒய்வூதியக் காரர்களுக்கு இம் மாதம் 200 ரூபா அதிகமாகக் கிடைக்கும்

கடந்தநவம்பர் மாத வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட 100 ரூபா சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியம் பெறுவோருக்கு இம்மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் காரர்களுக்கு ஜனவரி மாதத்துக்குரிய இந்த அதிகரிப்பு நிலுவை 100 ரூபாவும் இம்மாத ஒய்வூதியத்துடன் கிடைக்கும்.

மார்ச் மாதம் முதல் ஒய்வூதியத்துடன் அந்தந்த மாதத்துக்குரிய 100 ரூபா அதிகரிப்பு வழங்கப்படும்.

## வேலை நீக்கம் செய்யப்படவிருந்த விவசாயத்துறை ஊழியர் தொடர்ந்தும் சேவையில்!

பெப்ரவரி முதலாம் திகதி வேலை நீக்கம் செய்யப்படவிருந்த விவசாய அபிவிருத்தி விவசாய ஆராய்ச்சித்துறையைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேலதிக ஊழியர்கள் அனைவரும் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸ பண்டா இதனை அறிவித்தார்.

இத்துறையில் மேலதிகமாக சேவையில் ஈடுபட்டுள்ளோரை நீக்கிவிடுமாறு இவர்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு சிபாரிசு செய்திருந்தது.

இவர்களுக்கான சம்பளமும் இதன்படி இவ் வாண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கவனிப்பார் எவருமின்றி பாழடைந்த நிலையில் அனுராதபுரம் கதிரேசன் ஆலயம்!

அனுராதபுரம் நகரில் அமைந்துள்ள பழமைவாய்ந்த ஸ்ரீ கதிரேசன் கோவில் எந்த வகையான புனரமைப்பும் இன்றி பாழடைந்து தற்பொழுது காணப்படுவதாக அங்கிருந்து கிடைத்த தகவலொன்று தெரிவிக்கின்றது.

இவ்வாலயம் 1983-இல் ...ன் முறைய... சேத...க்கப்ப... ஆலயத்தைச் ...ம்பி காட்சியளிப்பதுடன் பற்றைகள் மண்டி துர்நாற்றமும் வீசுவதை அவதானிக்க முடிகிறது.

## செலவுப்புள்ளி

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாத வாழ்க்கைச் செலவுப் புள்ளி (கொழும்பு நுகர்வோர் விலைப் பட்டியலின்படி) 1213 4 என்று புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## திருப்பதி ஏழுமலையானுக்கு மலையாகக் குவிகிறது...

திருப்பதி ஏழுமலையான் கோவில் பற்றிய சில தகவல்கள் :-

★ கடல் மட்டத்துக்கு மேல் 3100 அடி உயரத்தில் அமைந்துள்ளது திருப்பதி ஏழுமலையான் கோவில்.

★ 1923 இல் திருப்பதி கோவலின் வருமானம் ஆண்டுக்கு 10 லட்சம் ரூபா. இப்போதைய ஆண்டு வருமானம் 110 கோடி ரூபா. தினமும் ஏழுமலையானைத் தரிசிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை 40 ஆயிரம். சனி - ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை

★ ஆலயத்தில் காலை 3 மணி முதல் அரை மணி நேரம் 'சுப்ரபாதம்' நிகழ்ச்சி நடைபெறுகிறது. 3 30 முதல் 4 மணி வரை 'தோமால சேவை' இடம்பெறுகிறது. 4.30 முதல் 5 மணி வரை 'சகஸ்ர நாம அர்ச்சனை' யும், பகல் 12 முதல் 2 வரை கல்யாண உற்சவமும், பிற்பகல் 3 முதல அரை மணி நேரம் 'ஊஞ்சல் சேவை'யும் தினமும் இடம்பெறுகிறது.

★ திருப்பதி உண்டியலில் தங்கம், வெள்ளி, நகைகள், நாணயங்கள், கரன்ஸி நோட்டுக்கள் குவிகின்றன. கடந்த ஆகஸ்ட் 15 ஆம் திகதி உண்டியலில் கிடந்த பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்த போது 500 ரூபாய் நோட்டுக்களைத மொத்தம் 27 இலட்சம் ரூபா இருந்தது. பிறகு செப்டம்பர் மாதத்தில் இதேபோல் ஒரு கத்தையில் 22 இலட்சம் ரூபா இருந்தது. தினமும் 'சிப்டு' க்கு 40 பேர் உண்டியலில் விழும் பணத்தை எண்ணும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

★ திருப்பதி லட்டுக்கள் புகழ் பெற்றவை. தினமும் $1\frac{1}{4}$ இலட்சம் லட்டுக்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. லட்டு வாங்குவதற்கும் பெரிய கியூ தினமும் காணப்படும்.

★ திருப்பதி தேவஸ்தானத்தில் மொத்தம் 12 ஆயிரம் ஊழியர்கள் உள்ளனர். திருப்பதி தேவஸ்தானம் 5 பல்கலைக்கழகங்களை நடாத்துகிறது. இவை தவிர மருத்துவக் கல்லூரி, கலைக்கல்லூரிகளும் உண்டு.

ஈழத்தமிழர்களுக்கு உதவி செய்வதை விட உபத்திரவம் செய்வதே தமிழக அரசின் நோக்கம்

# ஈழத்தை அங்கீகரிப்பதே இந்தியா செய்யும் உதவியாக இருக்க முடியும் - டாக்டர் ராம்தாஸ்

தமிழீழத்தை உடனடியாக அங்கீகரிப்பதுதான் இந்தியா தற்போது தமிழீழ மக்களுக்குச் செய்யும் ஒரே ஒரு உதவியாக இருக்க முடியும் எனத் தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்திலிருந்து கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் தமிழகம் வந்துள்ள தமிழர்களை மீண்டும் அங்கே அழைத்துப் போகப் போவதாகக் கூறி வாகன ஊர்வலமொன்றை நடாத்த முயன்ற டாக்டர் ராம்தாஸின் பேட்டியைத் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'ஜூனியர் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அப்பேட்டியிலேயே டாக்டர் ராம்தாஸ் ஈழப் பிரகடனம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு உதவி செய்வதை விட உபத்திரவம் செய்வதே தமிழக அரசின் நோக்கம் போலும். தமிழீழத்தை உடனடியாக இந்திய அரசு அங்கீகரிப்பது ஒன்றுதான் இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் நல்லது; தமிழீழ மக்களுக்கும் பாதுகாப்பான ஒரேதீர்வு.

## நெஞ்சுவலி எல்லாம் மாரடைப்பு ஆகாது!
### ஆடைகள வியர்வையில் முற்றாக நனைந்தாலே அவதானம் தேவை

முன்பெல்லாம் மாரடைப்பு (HEART ATTACK) இருதய நோய் நூறில் ஒருவருக்குத்தான் வருவதுண்டு ஆனால் இன்று நாம் உண்ணும் உணவிலும், விசேடமாக சூழ்நிலை காரணமாகவும் கணிசமானோர் இந் நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

அதே சமயம் நெஞ்சில் ஏற்படும் வலிகள் எல்லாவற்றையும் காட் அற்றாக் என்று தப்புக்கணக்குப் போட்டு வீண் பீதியடைபவர்களும் உண்டு.

உண்மையான, 'கரோனி' என்று கூறப்படும் ஆபத்தான இருதய வருத்தமாய் இருந்தால், வலி நெஞ்சின் மத்தியில் உண்டாகும். அங்கிருந்து மேல் அடிவயிறு, தோள், கழுத்து, கைவரையும் வலி இலேசாகப் பரவும் இருதயம் நசுக்கப்படுவது போல் தோன்றும். உடுத்தியிருக்கும் உடைகள் நனையும் அளவிற்கு வியர்வை கொட்டும்.

இந்த அடையாளங்கள் தோன்றியவுடனே, கொஞ்சம் கூடக் காத்திராமல் இருதய மருத்துவரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட சிகிச்சைப் பிரிவிற்கோ நோயாளியைக் கொண்டு சென்றால் பிழைக்க வைத்து விடலாம் என்று ''த மெடிசன்'' என்ற ஆங்கில சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (16)

## பாடசாலைகளில் சதுரங்கம்; மாணவர்களுடன் ஆசிரியர்களும் ஆடுவர்!

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

15 வயதிற்கு உட்பட்டவர்கள் 19 வயதிற்கு உட்பட்டவர்கள் என மாணவர்களுக்கு இரு பிரிவுகளிலும் ஆசிரியர்களுக்கு ஒரு பிரிவிலுமாக மூன்று பிரிவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் முதலில் கோட்ட மட்டத்தில் இடம்பெறும், இதில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் மாத்திரம் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெறுவர்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர், உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 10-ம் திகதிக்குப் பிந்தாமல், யாழ். கல்வித்திணைக்கள உடற்கல்விப்பிரிவில் கையளிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (16)

## சைவமன்றப் பரீட்சையில் மெதடிஸ் கல்லூரிக்கு தங்கப்பதக்கம்

இலங்கை சைவமன்றம் பாடசாலை மாணவிகளுக்கிடையே நடாத்திய சமயப் போட்டியில் முதலாவது பரிசான தங்கப்பதக்கம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிக்குக் கிடைத்துள்ளது.

இப் பரிசளிப்புவிழா இலங்கை சைவமன்றத் தலைவர் பேராசிரியர் வி கே கணேசலிங்கம் தலைமையில் சிவன் கோவில் கலா மண்டபத்தில் நடைபெற்றது. (11)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் புதுவித காய்ச்சல் பரவுகிறது!

வடமராட்சி கிழக்கில் புதுவித காய்ச்சல் ஒன்று வேகமாகப் பரவி வருகிறது.

இப் பகுதியில் இடம்பெயர்ந்தோர்களுக்கும் ஏனையோர்களுக்கும் இக் காய்ச்சல் அண்மைக் காலமாகப் பரவி வருகிறது. மலேரியாக்காய்ச்சல் தடுப்பு மருந்தினை உட்கொண்டவர்களும் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (10)

## 'அரசியலிலிருந்து ஒதுங்கிவிடவில்லை வாய்ப்பை பார்த்திருக்கிறேன்'- மேனகா காந்தி

அரசியலில் இருந்து முற்றாகதான் ஒதுங்கி விடவில்லை என தற்பொழுது கொழும்பு வந்துள்ள திருமதி மேனகா காந்தி தெரிவித்துள்ளார்

'குறுகிய காலமாக அரசியலில் ஈடுபடாமல் இருக்கிறேன். ஆனால் அரசியலில்வாய்ப்பை எதிர்பார்த்திருக்கிறேன்' என மேனகா காந்தி தெரிவித்துள்ளார்,

## தென்கிழக்கு துருக்கி பனிப்பாறைச் சரிவில் 170 பேர் பலி!
### உறைபனியில் சிக்கிய 150 பேரை மீட்க முடியா நிலை!!

தென்கிழக்குத் துருக்கியில் ஏற்பட்ட பனிப்பாறைச் சரிவில் இறந்தோரின் எண்ணிக்கை 120 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை அங்கு இந்தப் பனிப்பாறைச் சரிவு நிகழ்ந்திருந்தது.

இறந்தோரில் நேற்று வரை 38 பேரின் சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டன, இதே வேளை இன்னமும் 150 பேர் உறைபனிக்கட்டியில் சிக்கியுள்ளதாகவும், இவர்களை மீட்டெடுக்கும் பணிக்கு கால நிலை தடையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இறந்தவர்களில் 130 பேர் துருக்கிப் படையினர்.

## தமிழக - கர்நாடக பஸ் சேவை பொலிஸ்காவலுடன் பகலில்மட்டும்!

தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்குமிடையேயான அரச பஸ்சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இரவு பஸ் சேவைகள் தொடர்ந்தும் நிறுத்தியே வைக்கப்பட்டுள்ளன.

தமிழகம், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து கர்நாடகத் தலைநகர் பெங்களூருக்கான அண்ணா, அன்னை சத்தியா போக்குவரத்துக்கழக பஸ் சேவைகள் கடந்த ஒன்றரை மாதத்தின் பின் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

எல்லா பஸ்களும் ஒன்றாகச் சேர்ந்து, பொலிஸ் பாதுகாப்புடன் காலை 5 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையில் மட்டும் சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.

## வெள்ளி தோறும் விடுமுறை; நேபாள மன்னரிடம் கோரிக்கை

இந்துக்கள் வாழும் நாடுகளில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் இந்துப் பாடசாலை விடுமுறை தினமாகவும் இந்துக் கோவில்களில் சமய வகுப்புக்களை நடாத்தும் நாளாகவும் நடைமுறைப்படுத்த உதவுமாறு நேப்பாள மன்னரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீனமும், யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் நேப்பாள மன்னருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளன.

உலகில் பரந்து வாழும் இந்து சமய அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் இரு மணி நேரம் வழிபாட்டு உரிமையையும் வழங்க உதவுமாறும் அவ் வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது. (14)

## அரசியல் வாதிகளை கதிகலங்கச்செய்த 'கொலற்' ஆஸியில் மரணம்!

உலகின் தலை சிறந்த கேலிச் சித்திரகாரருள் ஒருவர் என்று பாராட்டப்பட்ட, கேலிச் சித்திரம் வரைவதில் மேதையான 'கொலற்' அண்மையில் அவுஸ்திரேலியாவில் மரணமானார்.

இலங்கைப் பிரஜையான இவர் முதலில் 'ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையிலும், பின்பு ஏரிக்கரைப் பத்திரிகை ஸ்தாபனத்திலும் கேலிச் சித்திரம் வரைபவராகக் கடமையாற்றினார். இங்கு கடமையாற்றும் பொழுது அந்த ஸ்தாபனத்தில் இருந்து வெளிவந்துகொண்டிருந்த மூன்று மொழிப் பத்திரிகைகளிலும் இவரின் கேலிச் சித்திரங்கள் இடம்பெற்றன. இக்காலகட்டத்தில் இவரின் கேலிக்கும், கிண்டலுக்கும் இலக்காகாத அரசியல் பிரமுகர்கள் எவருமே இல்லை.

1958 ஆம் ஆண்டளவில் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில், கொலற்றுக்கும், பண்டாரநாயக்காவிற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை அடுத்துக் கொலற் அவுஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்தார். அங்கும் அவர் தன் கைத்திறனைக் காட்டத் தவறவில்லை.

இவரைக் கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய அரசாங்கம் இவர் வரைந்த கேலிச் சித்திரம் ஒன்றை முத்திரையாக வெளியிட்டுள்ளது.

### நாய்களைப் பிடிக்க ஏற்பாடு

விசர் நாய்க் கடியிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காகத் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணியில் நீர்வேலிப் பிரதேச சபையினர் ஈடுபடவுள்ளனர். (35)

## ★ கூடுவது உயரம் மட்டுமல்ல ... தடுக்க வந்த காவல்காரனும் தன்னுயிரைத்தானே மாய்த்தான்!

பாரிசில் உள்ள உலகம் புகழ் பெற்ற ஈபல் கோபுரம் 8091 தொன் இரும்புச் சட்டங்களால் உருவாக்கப்பட்டது அலெக்ஸாண்டர் குஸ்தான் ஈபல் என்ற கலைஞர் உருவமைத்துக் கட்டிய இந்தக் கோபுரம் முதலில் 986 அடி உயரம் மட்டுமே இருந்தது, பின்பு 1957 ஆம் ஆண்டில் டெலிவிஷன் ஏரியலுக்காக இன்னும் 87 அடிகள் உயர்த்தப்பட்டது

இது கட்டப்பட்ட காலத்தில் இருந்து இந்தக் கோபுரத்தில் இருந்து குதித்துத் தற்கொலை செய்தவர்களின் எண்ணிக்கை 451. இதனைத் தடுக்கும் முகமாக அரசு ஒரு காவல்காரரை நியமித்தது சமீபத்தில் அந்தக் காவல்காரரும் அதே கோபுரத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். (16)

## தப்பியோடும் இராணுவத்தை கைது செய்யப் பொலிஸாருக்கு உத்தரவு!

இராணுவத்தில் கடமையிலீடுபட்டிருந்த போது தப்பிச் சென்றவர்களை தேடிப்பிடித்துக் கைது செய்யுமாறு இராணுவத் தலைமையகம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவர்கள் பயிற்சிக்காலத்தின் போதும், தனித்து சேவையிலீடுபட்டிருந்த போதும் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது

மாத்தளை மாவட்டத்தில் இவ்வாறு 27 பேர் தப்பிச் சென்றுள்ளரெனவும் அவர்களில் 10 பேர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

மேலும் பொலிஸ் நிலையங்களுக்கு வந்து சரணடைய விரும்புவோருக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது

அனேகமான இராணுவத்தினர் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று கடமை புரியுமாறு பணிக்கப்பட்டதும் தப்பியோடும் முயற்சியிலீடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஆரம்ப விழா

மந்திகை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கொடி வார ஆரம்ப விழா இம் மாதம் 9 ஆ[illegible] திகதி வைத்தியசாலை [illegible] விருத்திச் சபைத் தலைவ[illegible] மாவட்ட வைத்திய அதிகா[illegible] மான வைத்தியகலாநிதி [illegible] சதிர[illegible]ளை தலை[illegible] யில் [illegible]ள்ளது.

# அகதிகளைத்திருப்பி அனுப்புவதற்கு அமெரிக்க அமைப்புகள் கண்டனம்

ஈழத்தமிழ் அகதிகளை இந்திய அரசு பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பிஅனுப்புவதை இரு அமெரிக்க மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

இலங்கையில் வன்முறைகள் தொடர்கின்றன; மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இந்நிலையில் இந்தியா அகதிகளைப் பலவந்தமாக திருப்பி அனுப்புவது ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும் என அகதிகளுக்கான அமெரிக்கக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வமைப்பு இது குறித்து அறிக்கை ஒன்றை அமெரிக்க காங்கிரஸிடமும் வழங்கவுள்ளது.

இதேவேளை வாஷிங்டனில் உள்ள ஆசிய மனித உரிமை கண்காணிப்புக்குழு, (ஏசியா வோச்) அகதிகளின் சம்மதம் பெறாமலேயே இந்தியா அவர்களை திருப்பியனுப்புகிறது எனக் கண்டித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ நா தூதரகத்தைச் சேர்ந்த தூதுவர் இவ்விடயத்தில் தலையிட்டு முடிவுகளை எடுகவேண்டுமென ஏசியா வோச் அமைப்பு கோரியுள்ளது.

## ம. எண்ணெய் விலை குறைப்பு

யாழ். மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மண்ணெண்ணெயின் விலையை மேலும் குறைக்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளார்கள். இதற்கமைய நாளை முதல் சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 28 ரூபாவாக இருக்குமென சபைத் தலைவர் திரு. செந்திநாதன் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

## ஐ. நா.முயற்சிக்கு எதிர்ப்பு

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐ நா. எடுக்கும் முயற்சிகளைப் பாகிஸ்தான் ஆதரிப்பதை ஆப்கானிஸ்தான் தீவிரவாதக் கொரில்லாக்கள் வன்மையாக ஆட்சேபித்துள்ளனர்.

இதேவேளை ஆப்கானிஸ்தான் அரசு பாகிஸ்தானின் முயற்சியை வரவேற்றுள்ளது.

''எங்கள் மீது ஆட்சியை வெளியில் இருந்து திணிபவர்கள் எம் மீது யுத்தப் பிரகடனம் செய்தவர்களாவார்கள். அதற்கு நாம் தயாராக உள்ளோம் என தீவிரவாதக் குழுத்தலைவர் கூறினார்.

## அரசஊழியருக்கு இடமாற்றச் சபை

அரசாங்க ஊழியர்களுக்கான இடமாற்றம் இனிமேல் இடமாற்றச்சபை ஒன்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுமென பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இடமாற்றச்சபை மந்திரிசபையின் அங்கீகாரத்துடன் செயற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

திணைக்களங்கள் மட்டத்தில் இடம்பெறும் சகல இடமாற்றங்களும் இனிமேல் இச்சபை மூலமே இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது 6

## பொருத்தமான நடவடிக்கையை புதுடில்லி எடுக்கிறதாம்!

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோரை சரணடையுமாறு சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து புதுடில்லி சில பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் என இந்திய வெளியுறவு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

எனினும் எந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறித்து அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

நீதிமன்ற உத்தரவுகள் கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் ஆங்கில தினசரியிலும் தமிழ்த் தினசரியிலும் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

## முன்னாள் பிரதமர் மீது இலஞ்ச விசாரணை

இலஞ்சக் குற்றச்சாட்டுத் தொடர்பாக முன்னாள் ஜப்பான் பிரதமர் சென்கே சுசுகி தீவிர விசாரணைக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானின் முன்னாள் அமைச்சர் ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுசுகி மீதான விசாரணை முடுக்கிவிடப்பட்டிருப்பதாக ஏஜன்ஸி செய்தி தெரிவித்தது.

சொத்து, கட்டிட விநியோகிப்பு நிறுவனம் ஒன்றின் மூலம் 80 மில்லியன் யென் (6 இலட்சம் அமெரிக்க டொலர்) இலஞ்சம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட இக் குற்றச் சாட்டில் வேறு அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுவதால் ஜப்பானில் ஒரு பொதுத் தேர்தல் வரலாம் என்ற ஊகமும் தெரிவிக்கப்படுகிறது.

## எழுதுவினைஞர் பரீட்சை

## அனுமதி அட்டை 6 ஆம் திகதி தபாலில்

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச எழுதுவினைஞர் பதவிக்கான போட்டிப்பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் தபாலில் சேர்க்கப்படும் என யாழ் அரச அதிபர் தெரிவித்தார்,

இப்பரீட்சைக்கு தோற்றுவோர் மேற்படி அனுமதி அட்டையுடன் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு ஏதாவது ஒன்றைப் பரீட்சை மண்டபத்துக்கு எடுத்துச் செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார். 06

## முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்துக்கு மேலும் மூன்று வருடம் சிறைத் தண்டனை

முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி ஹூசெய்ன் முகமட் எர்ஷாத்துக்கு டாக்கா நீதிமன்றம் ஊழல் குற்றச்சாட்டுக்காக 3வருடச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஜெனரல் எர்ஷாத் பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டபின் அவரது வீடு சோதனையிடப்பட்டபோது 5 இலட்சம் டொலர் பங்களாதேஷ் நாணயம் சட்ட விரோதமாக வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இப் பணம் தன்னுடைய ஜாக்கியோ என்ற கட்சியின் பணம் என்று சொன்னபோதிலும் சட்டரீதியாக இப் பணத்தைப் பெற்றார் என்பதை எர்ஷாத் நிரூபிக்கத் தவறியுள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்,

வெளிநாட்டுப் பிரமுகர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பரிசில்கள் ஏற்றார் என்ற குற்றச் சாட்டிலிருந்து விலக்கப்பட்ட எர்ஷாத் மீது ஊழல், பதவித் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்த எர்ஷாத் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தமைக்காக ஏற்கனவே 10 வருடச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்வாகிகள் தெரிவு

ஊரெழு கிராமசேவையாளர் பிரிவில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஊரெழு கணேச வித்தியாலயத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செயலாளர் இ மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது. 06

## பேசாலை அகதிமுகாமில் ஆட்கள் மர்ம மறைவு

மன்னார் பேசாலை அகதிமுகாமில் உள்ள தமிழ் மக்கள் மர்மமான முறையில் காணாமற்போவதாக புகாரிடப்பட்டுள்ளது.

பேசாலை அகதி முகாமிலுள்ளவர்களை படையினர் சில சமயங்களில் கைது செய்துகொண்டுபோகும் சம்பவங்களும் இன்னமும் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## ரகு வைத்தியசாலையில்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட ரகு என அழைக்கப்படும் சிவராஜ் என்ற இளைஞர் கோயம்புத்தூர் வைத்தியக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது!

பலாலி கிழக்கைச் சேர்ந்த ரகு கடந்த ஜூலை மாதம் விக்கி என்பவருடன் சேர்த்துக் கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்கு உதவியதாக ஏழு இந்தியப் பிரஜைகளும் அப்போது கைதாகியிருந்தனர்.

## கூட். சங்கங்கள் இன்று இயங்கும்

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் இன்று வழமை போல் செயற்படும் என யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அறிவித்துள்ளது.

வெகுஜனப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் நாளை சகல கூட்டுறவுச் சங்கங்களும் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு கோரிக்கை

பாடத்திட்டங்களை முழுமையாக நடத்தி முடிக்காத பாடசாலைகள் இந்து, கிறிஸ்தவ பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய பொது விடுமுறை நாட்களில் பாடத்திட்டங்களை நடத்திமுடிக்க வேண்டும் என கல்வித் திணைக்களம் எடுத்த முடிவுக்கு சகல ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் கேட்டுள்ளது.

அரசின்—

அமெரிக்க பல்கலைக்கழக சட்டங்களின் படி அங்கு உபகாரச் சம்பளம் பெற்று கல்வி பயிலுபவர் இத்தொகையை பரிசாக பெற்றுக்கொள்ள முடியாது என்பதினாலேயே பணப்பரிசைபெற்றுக்கொள்ள முடியவில்லைஎனஇதுகுறித்து தீபிகாவின் தந்தையார் நீம் சண்முகம் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார், 10

ஆணைக்குழு—

கியொடுக்குவதற்காகவே அ..தி மு. க அரசு இச் சட்டத்தை அமுல்படுத்தப்படுகிறது எனவும் தடாச்சட்டத்தின் கீழ் தற்போதுள்ள வழக்குகளை உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தின் விசாரணைக்குள் உள்ளாக்கப்பட வேண்டும் எனவும் அம் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுளளது.

கப்பலில்—

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏனைய குடாநாட்டுத் தபாலகங்களுக்கான தபால் பொதிகள் நாளை வழமை போல் அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது, 06

## தீவகக் கடிதங்கள் வந்தன

காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ளவர்களால் யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் எடுத்து வரப்பட்டன. 6

இந்தியாவுக்கு—

தெரிவித்ததாவர் மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில்;

ராஜீவுக்கும் ஜே. ஆருக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா கோரியது என வெளிவந்த தினசரிச் செய்தியை மறுத்தார். திரு. பிரட்மன் வீரக்கோன், தாம் இப்படி சொரவில்லை எனப் புதுடில்லியில் கூறியதை சுட்டிக்காட்டினார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இன்னமும் செல்லுபடியாகும் எனவும் ஜா அடபேட்டியில் தெரிவித்தார்.

ஐ, நா,—

1945 ஆம் ஆண்டிலிருந்து மேற்காட்டிய விதி ஐ நா சாசனத்தில் இருந்தபோதிலும் வல்லரசுகளுக்கிடையே யான பனிப் போர் காரணமாக அதனை அமுல்படுத்த முடியவில்லை என மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது

## எழுச்சிப்பேரணியில்சகலரும் இணைய வேண்டும்

தமிழ் மக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்திருக்கும் அடக்கு முறைகளையும், பொருளாதாரத்தடைகளையும் கடற்பிராந்தியங்களிலே தொழில் செய்ய முடியாத நிலையையும் சொந்த வீடுகளில் குடியிருக்க முடியாமல் அகதிகளாய் அல்லற்பட்டுத் திரியும் நிலையையும் நீக்கி மக்களின் துயர்துடைக்கக் கோரி நாளை யாழ் செயலக முன்றலில் நடைபெறவிருக்கும் வெகுஜன எழுச்சிப்பேரணியிலும், மறியல் போராட்டத்திலும். யாழ் குடாநாட்டின் எல்லா சன சமூக நிலையங்களிலிருந்தும் தலா 100 பேருக்குக்குறையாத அங்கத்தவர்களை அழைத்துவர வேண்டும்''

இவ்வாறு யாழ் மாநகர சனசமூக நிலைய சமாசத்தின் ஆறாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமாசத்தின் தலைவர் திரு தியாகராசா அவர்கள் தெரிவித்தார்கள்.

உரிமைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில் தமிழினம் தொடர்ந்தும் வாழத்தயாரில்லை. உரிமைகளை வென்றெடுக்க உணர்வு பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டது என்பதை சர்வ உலகுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் எடுத்துக்காட்டக் கூடியவகையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியும், மறியல் போராட்டமும் அமையவேண்டும். எழுச்சி கொண்ட மக்கள் தங்கள் உணர்ச்சிகளையெல்லாம் உரிமைகளைப் பெறுவதற்கே அர்ப்பணிக்கத்தயாராகிவிட்டார்கள் என்பதனை தெளியவைக்கக் கூடியவிதத்தில் நாமெல்லோரும் ஓரணியாக நின்று எமது குறிக்கோளை அரசுக்கு உணர்த்த வேண்டும் என மேலும்தெரிவித்தார்·25

இராணுவ..

மீதான நடவடிக்கை காலதாமதமாவதன் காரணம் என கொழும்புபத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

…பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் …வனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் …அச்சகத்தில் …1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது·